# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:- 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42-ஆம் விதி, 53-ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII-ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III-ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :- | அ.சா- 11 ( PW- 11 ) |
| **பெயர்** | :- | மதிவாணனன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :- | கன்னியப்பன் |
| **ஊர்** | :- | |
| **வருவாய் வட்டம்** | :- | |
| **சமூகம் (சாதி)** | :- | |
| **தொழில்** | :- | |
| **மதம்/சமயம்** | :- | |
| **வயது** | :- | |

**2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் 1969-ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01-ஆம், 04-ஆம், 05-ஆம், 07-ஆம், 08-ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 03-ஆம், 05-ஆம் எதிரிகள் தோன்றவில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் மேட்டூர் காவேரி cross ATC அவென்யூ வசிக்கிறேன். நான் விவசாய தொழில் செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன அமிர்தராஜை எனக்குத் தெரியாது. மேட்டூர் காவேரி cross பகுதியில் எனக்கு சொந்தமாக இடம் உள்ளது. அந்த இடத்தை இந்துஸ்தான் தாபா என்ற பெயரில் உணவகம் நடத்த குமார் என்பவருக்கு வாடகைக்கு விற்றேன். 03 ஆண்டுகள் வாடகை -க்கு இருந்தார். சுமார் 06 ஆண்டுகளுக்குமுன் நான் வாடகைக்கு விட்டு இருந்த இடத்தில் கொலை நடந்துவிட்டதாக சொன்னார்கள். அதுச் சம்மந்தமாக நான் எதுவும் தெரிந்துகொள்ளவில்லை. இறந்த நபர் பற்றி எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 19.12.2017-ஆம் தேதியன்று நீங்கள் வாடகைக்கு விட்ட இந்துஸ்தான் தாபாவில் ஒருவரை வெட்டிக் கொன்றுவிட்டார்கள் என்று தகவல் வந்தது. மதியம் 01.30 மணிக்கு நான் அங்கு சென்று பார்த்தேனா என்றால் நான் அங்கு செல்லவில்லை. இந்துஸ்தான் தாபா சமையல் அறை வாசலின் முன்னால் ஒருநபர் கவிழந்த நிலையில் பிணமாக கிடந்தார் என்றும் அவர் தலை, கை, கால், உடல் இடத்தில் வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றும் அவரை பற்றி நான் விசாரித்த போது அவர் மேட்டூர் மால்கோ எதிரில் வசிக்கும் அமிர்தராஜ் என்று தெரிந்துக் கொண்டேன் என்றும் மேட்டூரில் வசிக்கும் ஸ்டாலின் ஜெயக்குமாருக்கும் அமிர்தராஜிக்கும் ஒரு வீட்டு நிலம் பிரச்சனையாக

கருத்து வேறுபாடு இருந்ததாகவும் அதனால் ஸ்டாலின் ஜெயக்குமார் அமிர்தராஜை வெட்டிவிட்டதாகவும் கேள்விபட்டேன் என்றும் புலனாய்வின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.